சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை – வேலைவாய்ப்புப் பிரிவு – பணியிடை இறந்த அரசு ஊழியர் திருமதி எஸ்.உஷாராணி என்பவரின் மகள் திருமதி ப்பி. ஸ்ரீவித்யா அவர்களுக்கு கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பணி நியமனம் செய்யப்பட்டது – உரிய விதித் தளர்வு செய்து, அவர் பணியில் சேர்ந்த நாளான 13.07.2018 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (என்.2) துறை

அரசாணை (2டி) எண்: 32

நாள்: 02.09.2020
சார்வரி, ஆவணி – 17,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள். 23.01.2020.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள். 01.08.2018.
3. இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடிதம் எண். நிர்2/24865/2017, நாள். 28.11.2019, 03.02.2020 மற்றும் 19.06.2020.

--------

ஆணை:-

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (பொது), சாந்தோம், சென்னை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திருமதி எஸ். உஷாராணி என்பவர் பணியிலிருக்கும் போது 15.12.2008 அன்று பணியிடை இறந்ததால் அவரது வாரிசான திருமதி ப்பி. ஸ்ரீவித்யா பணிநியமனம் அளிக்கக் கோரி 30.11.2011 அன்று விண்ணப்பித்துள்ளார் என்றும் விண்ணப்பதாரரின் பிறந்த தேதி 26.11.1978 என்றும் விண்ணப்பிக்கும் நாளில் அவரது வயது 33 என்றும் விண்ணப்பிக்கும் நாளில் தனியர் திருமணமானவர் என்றும் தனியர் அடிப்படை கல்வித் தகுதியான பத்தாம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றுள்ளார் என்றும் இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும் அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரியவில்லை என்றும் மறைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி ப்பி. ஸ்ரீவித்யா பணிநியமனம் அளிக்கும்படி கேட்டு, கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டி அசல் ஆவணங்களை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பியுள்ளதன் அடிப்படையில் மூல ஆவணங்கள் மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமன விதிகளுக்குட்பட்டு நியமன அதிகாரி திருமதி ப்பி. ஸ்ரீவித்யா என்பவரை, 13.07.2018 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்துள்ளார் என்றும் தெரிவித்து

தனியரது கருணை அடிப்படையிலான பணிநியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதன்படி இதனை ஏற்று, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016), பிரிவு 58–ன்கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016), பிரிவுகள் 15 மற்றும் 28(2) ஆகியவற்றை தளர்த்தி திருமதி ப்பி. ஸ்ரீவித்யா என்பவர் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்குத் தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 13.07.2018 பிற்பகல் முதல் அன்னாரின் பணியை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றினை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். மேலும், நிலுவைத் தொகை அதிகமாக வழங்கப்பட்டது என பின்னர் தெரிய வந்தால், அத்தொகை வருங்காலங்களில் அவரிடமிருந்து பிடித்தம் செய்யப்படும். இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3. இவ்வரசாணை, இத்துறையின் 'க்யூ' பிரிவு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஜி) துறையின் அலுவல் சார்பற்ற எண்.16163/ஜி2/2020–1, நாள்.17.07.2020–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

திருமதி ப்பி. ஸ்ரீவித்யா, இளநிலை உதவியாளர்,
மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு), சென்னை–600 032.
(வழி: இயக்குநர் (மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை–600 032.)

இயக்குநர் (மு.கூ.பொ),வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை–600 032.

நகல்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
அரசு இணை செயலாளரின் நேர்முக எழுத்தர், தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) துறை, சென்னை–600 009.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த (ஜி) துறை, சென்னை– 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (அநமு–2) துறை, சென்னை–600 009.
இருப்பு கோப்பு /சுத்த நகல்/ உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

உண்மை நகல் பெற்றுக்கொண்டேன்